**செய்தி வெளியீடு எண்:401** **நாள் :13.08.2015**

ஓமன் நாட்டிலுள்ள ஒரு முன்னணி நிறுவனத்திற்கு 10ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் இரண்டு வருட பணி அனுபவத்துடன் 22 முதல் 32 வயதிற்குட்பட்ட இயந்திரம் இயக்குபவர்கள் (Machine Operators) தேவைப்படுகிறார்கள்.

மேலும், குவைத் நாட்டில், இந்திய தொலைதொடர்பு திட்டப்பணிகளுக்காக எட்டாம் வகுப்பு தேர்ச்சியுடன் 22 முதல் 35 வயதிற்குட்பட்ட கேபிள் பொருத்துவதற்கான பள்ளம் தோண்டுதல் தொடர்பில் இரண்டு வருட பணி அனுபவம் பெற்ற லேபர்கள் மற்றும் செல்லத்தக்க குவைத் ஓட்டுநர் உரிமம் வைத்துள்ள கனரக வாகன ஓட்டுநர்களும், இந்திய ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளவர்களும் தேவைப்படுகிறார்கள். இந்திய கனரக ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளவர்கள் குவைத் கனரக ஓட்டுநர் உரிமம் பெறும் வரை அவர்கள் லேபராக பணிபுரிய வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தகுதி மற்றும் அனுபவத்திற்கேற்ப ஊதியம், இலவச விமான டிக்கெட், இருப்பிடம் மற்றும் தொடர்புடைய நாட்டின் சட்டதிட்டத்திற்கேற்ப இதர சலுகைகளும் வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட பணியிடங்கள் தொடர்பான விரிவான விவரங்கள் மற்றும் ஊதிய விவரங்களை www.omcmanpower.com என்ற இந்நிறுவன இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட பணியிடங்களுக்கு தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் ஒரிஜினல் பாஸ்போர்ட், தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் இரண்டு நகல்கள் மற்றும் நீலநிற பின்னணியில் எடுக்கப்பட்ட 5 புகைப்படத்துடன், திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் (மன்னார்புரம்) 30.8.2015 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் நடைபெறும் முதற்கட்டத் தேர்விற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, 044–22502267/22505886/08220634389 என்ற தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள் மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம்.

**நிர்வாக இயக்குநர்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**